2013 மே 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 489, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

489—

மலைப் பாதை அமைத்தல்

***19140—திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, விராலிப்பட்டி ஊராட்சி, சிறுமலை மீனாட்சிபுரத்திற்கு நேரடி மலைப் பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து வணங்குகிறேன். மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, விராலிப்பட்டி ஊராட்சி, சிறுமலை மீனாட்சிபுரத்திற்கு நேரடி மலைப் பாதை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, சோழவந்தானில் இரயில்வே மேம்பாலம் அமைக்க ரூ.41 கோடி ஒதுக்கியும், அலங்காநல்லூர் சார் பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.50 இலட்சம் நிதியுதவி வழங்கியும், குற்றாடம்பட்டி அருவியை சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையின் விவாதத்தின்போது சுற்றுலாத்தலமாக அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

அம்மா என்ற மந்திரச் சொல்லை அன்பு உள்ளத்தோடு சொல்லும் பழமைமிக்க கழக முன்னோடிகள், புதுமைமிக்க இளம்பாசறைகளின் துடிப்புகளை இதயத்தில் ஏந்தி, பழமைமிக்க பழமைக்கும் பழமையாய், புதுமைக்கும் புதுமையாய் செயல்தனைப் புரிந்து, ஆறுபோல் பெருகி, அறுமொழி பொழிந்து அனைத்துத் தொண்டர்களின் இதய பீடத்தில் உள்ளும், புறமுமாகி எப்போதும் இருப்பதால், யாரும் அடைய முடியாத பெருமைமிக்க இடத்தில் வீற்றிருக்கும் வாழும் மனித தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட விராலிப்பட்டி ஊராட்சி ஒரு குக்கிராமம். அந்தக் கிராமத்திற்கு இதுவரை எந்தவித அடிப்படை வசதியும் இல்லை. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் அது நன்கு தெரியும். அந்தக் காரணத்தினால்தான், திண்டுக்கல் மாவட்ட மின் பகிர்மானத்திலிருந்து மின்சார வசதி செய்து கொடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்த இடம் வனத் துறைக்குச் சொந்தமானது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, கேள்வியைக் கேளுங்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று சிறுமலை மீனாட்சிபுரத்திற்கு நேரடி மலைப் பாதை அமைத்துக் கொடுக்க முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், சோழவந்தான் தொகுதி, விராலிப்பட்டி ஊராட்சி, சிறுமலை மீனாட்சிபுரத்திற்கு நேரடி மலைப் பாதை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. விராலிப்பட்டி வனப் பகுதி, அரசாணை நிலை எண் 127, நாள் 14—6—2002—ல் தமிழ்நாடு வனச் சட்டம் 1882, பிரிவு 16—ன்கீழ் காப்புக்காடாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இதில்

2013 மே 14]

மேற்காணும் சாலைப் பகுதி குறித்து அனுமதிக்கப்பட்ட வழி உரிமை ஏதும் வழங்கப்படவில்லை. எனவே, மேற்காணும் சாலை அமைக்கப்பட வேண்டுமானால், வன நிலம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். இதுகுறித்து வனப் பாதுகாப்புச் சட்டம், 1980–ன்படி மைய அரசினுடைய முன்னனுமதியைப் பெறவேண்டும். எனவே, பயனீட்டாளர் துறையான நெடுஞ்சாலைத் துறையோ அல்லது ஊரக வளர்ச்சித் துறையோ சாலை அமைக்க அனுமதி கோரினால், வனப் பாதுகாப்புச் சட்டம், 1980 விதிமுறைகளின்படி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மைய அரசினுடைய முன்னனுமதியைப் பெற்று, சாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளும் என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதைபடும் விதையும் பூமியைப் பிளந்து பூக்களாய் மலர்ந்து புன்னகை புரிகையில், மரணம் என்பது கலைஞனுக்கு ஏது என்பதைப்போல, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சி நடக்கும் இத்தருணத்தில் வைகாசிப்பட்டி முதல் சாத்தையாறு அணை வரையிலும், சால்வார்பட்டி முதல் மூடுவார்பட்டி வரையிலும் சரந்தாங்கி முதல் நத்தம் மெயின் ரோடு வரையிலும் வனத் துறைக்குச் சொந்தமான பாதையில் தார்ச் சாலை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கருணைப் பார்வைக்கு எடுத்துச்சென்று, மேற்கண்ட வனத் துறைக்குத் சொந்தமான பாதையில் தார்ச் சாலை அமைத்துக் கொடுக்க முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய

பாதையில் சாலை அமைப்பதற்கு பயனீட்டாளர் துறையான நெடுஞ்சாலைத் துறை விண்ணப்பிக்க வேண்டும், அல்லது, மாவட்ட ஊரக வளர்ச்சித் துறையினால் சாலை அமைக்க விண்ணப்பிக்கப்பட வேண்டும். இதுவரை யாரும் விண்ணப்பிக்கவில்லை. ஆகையால், இந்த இரண்டு துறைகளில் எந்தத் துறை விண்ணப்பித்தாலும் வனப் பாதுகாப்புச் சட்ட விதிமுறைகளின்படி மைய அரசினுடைய அனுமதியைப் பெற்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, அந்தப் பகுதி மக்களுக்கு சாலை அமைத்துக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளும் என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 490, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

490—

மேம்பாலம்

***8372—திரு. சி.எச். சேகர்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி ஒன்றியம், போந்தவாக்கம்—மாதர்பாக்கம் இடையிலுள்ள தரைப் பாலத்திற்குப் பதிலாக உயர்மட்டப் மேம்பாலம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கும்மிடிப்பூண்டி தொகுதி, கும்மிடிப்பூண்டி ஒன்றியம், போந்தவாக்கம்—மாதர்பாக்கம் சாலையில் தரைப் பாலத்திற்குப் பதிலாக உயர்மட்டப் பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது எனத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.